**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை**

**I.A.No. 1/2025 in O.S. No.154/2019**

திரு.சேசுராஜ் ..... மனுதாரர்/ வாதி

/ எதிர்/

1. திரு.தர்மராஜ் (இறப்பு)
2. திரு.முருகேசன்
3. திரு.ஜெயபாலகிருஷ்ணன் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
4. திரு.கார்த்திக்
5. திரு.கோபிநாத் ..... எதிர்மனுதார்கள்/ புரோ 4 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் இறுதியாக 09.02.2026 அன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B.வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுவில் கீழ்க்கண்ட விபரப்படி மேற்படி நம்பரில் இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை/புரோ 4 மற்றும் 5

பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி சிபிசி ஆர்டர் 22 ரூல் 4 மற்றும் பிரிவு 151– ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவுரை சுருக்கம்</u>

இவ்வழக்கின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதி வழக்கு சம்மனை பெற்றுக்கொண்டு ஆஜராகத்தால் கடந்த 14/11/2019 தேதி 1ம் பிரதிவாதி ஒருதலைபடுத்தப்பட்டு உத்தரவு பிறப்புவிக்கப்பட்டது. அதன் பின்பு, 1ம் பிரதிவாதி சென்ற 10/06/2021ம் தேதி அவரது மனைவி மகன்களை வாரிசாக விட்டு விட்டு காலமாகிவிட்டார். இந்நிலையில், கடந்த 07/09/2025ம் தேதி 1ம்பிரதிவாதியின் வாரிசை சேர்க்க உத்தரவு பிறப்புவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1ம் பிரதிவாதியின் மகன்கள் கார்த்திக் மற்றும் கோபிநாத் அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியதாக உள்ளது. எனவே மேற்படி வழக்கில் இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை/புரோ 4 மற்றும் 5 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4). <u>**தீர்வு**</u>

1. இம்மனுதாரர் அசல்வழக்கில் வாதியாவார். அசல்வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது வாதி வா.சா.1 விசாரிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படாத நிலையில், 1ம் பிரதிவாதி ஆஜராகாதநிலையில், அவர் இறந்துவிட்டதாக தெரியவந்ததாகவும், 1–ம் பிரதிவாதிக்கு 4 மற்றும் 5 புரோபார்ட்டி வாரிசுகள் ஆவார்கள் எனவும்,

1ம்எதிர்மனுதாரர்/1–ம்பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதிப்பதுதான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

2. **முடிவாக,** இம்மனுவை அனுமதித்து மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்களை தரப்பினர்களாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.18 16:28:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.